RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 44 | பிப்ரவரி.20 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# திமுக கூட்டணியில் இணைந்தது தேமுதிக முதல்வர் ஸ்டாலினுடன் பிரேமலதா சந்திப்பு

சென்னை, பிப்.20-

வருகின்ற தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தேமுதிக எந்தப் பக்கம் என்று நீண்ட நாட்களாக எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், யாரும் எதிர்பாராத நகர்வாக திமுக கூட்டணியில் இணைந்துள்ளது தேமுதிக.

சென்னையில் திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் காலை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோர் சந்திப்பு நிகழ்த்தினர். இந்த சந்திப்பின் போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மூத்த அமைச்சர்கள் சேகர்பாபு கனிமொழி எம்.பி. உள்ளிட்டோர் இருந்தனர். இந்தச் சந்திப்பின்போது, திமுக கூட்டணியில் தேமுதிக இணைவது உறுதி செய்யப்பட்டது.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலினுடன் கூட்டணி அமைத்த பின்னர் பிரேமலதா விஜயகாந்த் கூறும்போது, "தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக யாருடன் கூட்டணி என்ற கேள்வி நீண்ட நாட்களாக நிலவிவந்தது. அதன்படி, இன்று திமுகவுடன் தேமுதிக கூட்டணியை உறுதி செய்துள்ளோம்.

தேமுதிக நிர்வாகிகள், தொண்டர்கள் விரும்பியபடிய திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். தேமுதிக முதன்முறையாக திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளது. 2016லேயே இந்தக் கூட்டணி அமைந்திருக்க வேண்டும்.



பழம் நழுவி பாலில் விழும் என்று கருணாநிதி கூறியிருந்தார். ஆனால், அது இப்போது கேப்டன் இல்லாதபோது தாமதமாக நடந்துள்ளது.

மற்றபடி இந்தத் தேர்தலில் தேமுதிக எத்தனை தொகுதிகளில் போட்டியிடும், எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடும் போன்றவை எல்லாம் அண்ணன் ஸ்டாலின் அறிவிப்பார். இதற்காக ஒரு குழு அமைக்கப்படும். அந்தக் குழு திமுகவுடன் ஆலோசனை செய்தபின்னர் முறைப்படி அறிவிப்பு வெளியாகும்.

இந்தக் கூட்டணி தேமுதிகவினர், பொது மக்களும் வரவேற்கும் கூட்டணியாக உள்ளது. 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவது உறுதி. ராஜ்யசபா எம்.பி. சீட் குறித்து எல்லாம் அண்ணன் ஸ்டாலின் உரிய நேரத்தில் அறிவிப்பார்" என்றார் பிரேமலதா.

தேமுதிக கடந்து வந்த பாதை: கடந்த 2011ம் ஆண்டு விஜயகாந்த் தலைமையில் தேமுதிக தான் எதிர்கொண்ட முதல் சட்டப்பேரவைத் தேர்தலிலேயே 29 எம்எல்ஏக்களுடன் வலுவான அரசியல் பயணத்தைத் தொடங்கியது.

ஆனால், அதன்பின்னர் அதிமுகவுடன் ஏற்பட்ட விரிசல் காரணமாக 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக அறிவித்து மக்கள் நலக் கூட்டணியாக களம் கண்டு தோல்வியை சந்தித்தது.

2021ல் அமமுக, எஸ்டிபிஐ கட்சிகளுடன் இணைந்து தேர்தலை சந்தித்தது.

இந்நிலையில், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்துள்ளது தேமுதிக. வரும் தேர்தலில் 7 தொகுதிகள் வரையிலும், ஒரு ராஜ்யசபா சீட்டும் கேட்க தேமுதிக திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மதிமுக தனிச் சின்னத்தில்தான் போட்டியிடும்: வைகோ திட்டவட்டம்

சென்னை, பிப்.20-

"மதிமுக தனிச் சின்னத்தில்தான் போட்டியிடும். திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது மகிழ்ச்சி. தேமுதிக சேர்ந்ததும் திமுக கூட்டணி மேலும் வலுப்பெற்று இருக்கிறது," என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "பிரதமர் மோடி 3 முறையல்ல, 33 முறை தமிழகத்துக்கு வந்தாலும் பாஜவை இங்கு கால் பதிக்க வைக்க முடியாது. மதிமுக தனிச் சின்னத்தில் தான் போட்டியிடும். இண்டியா கூட்டணிக்கு முதல்வர் ஸ்டாலின் தான் தலைமை ஏற்க வேண்டுமென மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து குரல்கள் வருவது திமுகவுக்கு பெருமை. கூட்டணியில் இருப்பவர்களும் பெருமைப்படுகிறோம்.

திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்தது மகிழ்ச்சி. தேமுதிக சேர்ந்ததும் திமுக கூட்டணி மேலும் வலுப்பெற்று இருக்கிறது. எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் கலகலத்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் ஒரே நேரத்தில் ஒன்பது குரல் கொடுப்பார்கள். அவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது" என்றார்.

மேலும் தவெக தலைவர் விஜய் குறித்த கேள்விக்கு, "திரைப்படங்களைப் பார்த்து சில இளைஞர்களுக்கு விருப்பம் வந்திருக்கிறது. அதை பார்த்து அவர்கள் செல்கிறார்கள். ஆனால் அது தேர்தல் முடிவுகளில் வெற்றியை, தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தாது" என்றார்.

## ஸ்டாலின் வெளியேறினால் இண்டியா கூட்டணி வெறும் எழுத்தில் தான் இருக்கும்" சீமான் சொல்கிறார்

திருச்சி, பிப்.20-

இண்டியா கூட்டணியில் வலுவாக இருப்பது முதல்வர் மு.க.ஸ்டாலின் தான். அவர் வெளியேறி விட்டால் இண்டியா கூட்டணி என்பது வெறும் எழுத்தில் தான் இருக்கும் என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.



திருச்சியை அடுத்த ஆலம்பட்டி புதூரில் நாம் தமிழர் கட்சி சார்பில் வரும் 21ம் தேதி மாநாடு நடைபெறுகிறது. அதற்காக அங்கு நடைபெறும் ஏற்பாடுகளை கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாங்கள் தேர்தல் அறிக்கை வெளியிட மாட்டோம். எங்கள் ஆட்சி எப்படி இருக்கும் என்பதற்கான செயல்முறையைத் தான் வெளியிடுவோம். மாநாட்டில் 234 தொகுதி வேட்பாளர்களையும் அறிமுகம் செய்ய உள்ளேன். இந்தத் தேர்தலில் நானும் போட்டியிடுவேன். இடைக்கால பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட் ஆக உள்ளது. இந்த ஆட்சி முறையை நாங்கள் எதிர்க்கிறோம்.

தமிழகத்தின் வளர்ச்சி என்பது கடன் வளர்ச்சியாக உள்ளது. தமிழக அரசு வாங்கிய கடனுக்கு வட்டியாக ஒரு லட்சம் கோடிக்கு மேல் கட்டிக்கொண்டு இருக்கிறோம். இலவசங்கள் எனக் கூறிவிட்டு, மின் கட்டணம், சொத்து வரி போன்றவற்றை உயர்த்துகிறார்கள். தொடர்ச்சியாக கடன் வாங்கிக் கொண்டிருக்கும்போது நாடு பொருளாதார அடிமையாக மாறிவிடும்.

இண்டியா கூட்டணியில் ஏதோ பிரச்சினை இருப்பதால்தான், அவர்கள் நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் எனக் கூறிக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கூட்டணியில் வலுவான தலைவராக இருப்பது ஸ்டாலின் தான். அவர் வெளியேறி விட்டால் இண்டியா கூட்டணி என்பது வெறும் எழுத்தில் தான் இருக்கும். அதனால் தான் மணிசங்கர் ஐயர் ஸ்டாலினை தலைமை தாங்க அழைக்கிறார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தவெக தலைவர் விஜய், மக்கள் சந்திப்பு பயணத்தை தற்போது நிர்வாகிகள் சந்திப்பு பயணம் என்று மாற்றி உள்ளதை எப்படிப் பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்கு, "தம்பியை (விஜய்) குறை சொல்வது என் வேலையில்லை. என்னுடைய வேலையை நான் செய்து கொண்டிருக்கிறேன். அதை நீங்கள் என் தம்பியிடம் தான் கேட்க வேண்டும்" என்றார்.

## அன்று அதிமுக... இன்று திமுக! இன்னொரு பிளவுக்குத் தயாராகிறதா தமிழக காங்கிரஸ்

சென்னை, பிப்.20-

தொண்டர்களின் கருத்துக்கு எதிராக முடிவெடுத்தால் என்ன நடக்கும் என்பதற்கு 1996லேயே தகுந்த பாடம் படித்திருக்கிறது டெல்லி காங்கிரஸ் தலைமை. தற்போது தெரிந்தோ தெரியாமலோ கட்சியை அத்தகையை நிலைக்கு தமிழக காங்கிரஸார் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவே காய்களை நகர்த்தி வருகிறது டெல்லி.



1996ல் அதிமுகவுக்கு எதிரான மனநிலை தமிழக மக்கள் மத்தியில் அலையடித்தது. அதைப் புரிந்து கொண்ட மூப்பனார், மூழ்கும் கப்பலில் பயணிக்க வேண்டாம் என்ற முன்னெச்சரிக்கையுடன் அதிமுக கூட்டணியை விட்டு வெளியேற வேண்டும் என காங்கிரஸ் தலைமைக்கு கோரிக்கை வைத்தார். ஆனால், அப்போதிருந்த காங்கிரஸ் தலைமை அவரது கோரிக்கையை ஏற்கவில்லை. அதனால், வேறு வழியின்றி தமிழக காங்கிரஸை உடைத்து தமிழ் மாநில காங்கிரஸை உருவாக்கினார் மூப்பனார்.

அந்தத் தேர்தலில் திமுக கூட்டணியில் ரஜினியின் ஆதரவோடு 40 தொகுதிகளில் போட்டியிட்ட தமாகா 39 இடங்களை வென்றது. அதிமுக கூட்டணியில் 60 இடங்களில் வேட்பாளர்களை நிறுத்திய காங்கிரஸால் ஒரு இடத்திலும் கரை சேரமுடியவில்லை. அப்போது நடந்த மக்களவைத் தேர்தலிலும் போட்டியிட்ட 20 தொகுதிகளையும் வென்று சாதித்தது தமாகா.

30 ஆண்டுகள் கழித்து மீண்டும் அதேபோன்ற இக்கட்டான சூழ்நிலை காங்கிரஸுக்கு வந்திருக்கிறது. தேர்தல் பேச்சு தொடங்குவதற்கு முன்னதாக சுமுகமாக இருந்த காங்கிரஸ் திமுக உறவு, இப்போது ஊசலாட்டத்தில் இருக்கிறது. அதிக தொகுதிகள், அதிகாரத்தில் பங்கு என மாணிக்கம் தாகூர் உள்ளிட்ட ஒருசிலர் கொளுத்திப் போட்ட நெருப்பு இப்போது ஒட்டுமொத்தமாகப் பற்றிக் கொண்டு எரிகிறது. வெற்றி தோல்வியைப் பற்றி கவலைப்படாமல் தவெகவுடன் கூட்டணி வைத்தால் தமிழகம் முழுவதும் எழுபது எண்பது தொகுதிகளில் கை சின்னம் களத்தில் நிற்கும். கட்சிக்கும் ஒரு மரியாதை கிடைக்கும் என்ற கருத்தை காங்கிரஸ் தொண்டர்களின் எண்ணங்களில் விதைத்துவிட்டார்கள்.

அதேசமயம், விஜய்யின் உண்மையான பலம் என்ன என்பது தெரியாத நிலையில், திமுக உடனான நெடிய அரசியல் பயணத்தை தொடர விரும்பும் முக்கிய தலைவர்கள் சிலர், திமுக கூட்டணி தொடர வேண்டும் என நினைக்கிறார்கள்.

அதனால் தான் தற்போது காங்கிரஸ் சிட்டிங் எம்எல்ஏக்களாக இருப்பவர்களின் தொகுதிகளில் திமுகவை கோபப்படுத்தும் விதமாக எந்தப் பிரளயமும் வெடிக்காமல் இருக்கிறது. ஆனால், கூட்டணிப் பேச்சுவார்த்தையில் காங்கிரஸின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக திமுக பிடிவாதம் காட்டினால், 1996ல் ஏற்பட்டது போல் இன்னொரு பிளவும் தமிழக காங்கிரஸில் நடக்கலாம். 1996ல் தொண்டர்களின் விருப்பத்துக்கு ஏற்ப அந்தப் பிளவு நடந்தது. ஆனால், இம்முறை அப்படியான ஒரு பிளவு ஏற்பட்டால் அது பதவிகளை தக்கவைக்கத் துடிக்கும் தலைவர்களால் ஏற்பட்டதாக இருக்கும். அப்போது நடந்த பிளவு இயல்பான ஒன்றாக இருந்தது. இப்போது ஒரு பிளவு ஏற்பட்டால் அதன் பின்னணியில் திமுகவும் இருக்கும்.

1996ல் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவு தேர்தலில் சாதனை படைத்து, 'தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் தாங்கள் எடுத்த முடிவு தவறு' என்று டெல்லி காங்கிரஸ் தலைமையை உணர வைத்தது. ஆனால், இப்போது அப்படியான பிளவு ஏற்பட்டால், தேர்தலுக்குப் பிறகு, 'தலைமை எடுத்த முடிவு சரிதான்' என பிரிந்து சென்றவர்களை உணரவைக்கும் என்கிறார்கள் தமிழக காங்கிரஸில் இருக்கும் விஜய் விரும்பிகள். அதேசமயம், விஜய்யுடன் தான் கூட்டணி என டெல்லி காங்கிரஸ் தலைமை முடிவெடுத்தால் தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து செல்வப்பெருந்தகை முதல் நபராகத் தூக்கப்படலாம். அந்த இடம் மாணிக்கம் தாகூருக்கோ அவரது விசுவாசிக்கோ ரிசர்வ் செய்யப்படலாம். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

## முதல்வர் ஸ்டாலினை சந்திக்க முடியவில்லை: ஏமாற்றத்துடன் திரும்பிய கே.சி.வேணுகோபால்

சென்னை, பிப்.20-

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்திருந்த அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், முதல்வர் ஸ்டாலினை சந்திக்க முடியாததால் மிகுந்த ஏமாற்றத்துடன் டெல்லி திரும்பியிருப்பதாக கூறப்படுகிறது. இதுகுறித்து சத்தியமூர்த்தி பவன் சீனியர்கள் கூறுகையில், "தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நடைபெற்ற காங்கிரஸ் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கே.சி. வேணுகோபால் வந்திருந்தார். திட்டமிட்டபடி தனது நிகழ்ச்சிகளை



முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் இரவே அவர் டெல்லி திரும்புவதாக இருந்தது. இதற்கிடையில், கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தும் விதமாக மாணிக்கம் தாகூர் மற்றும் பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் தொடர்ந்து பேசி வந்தது, திமுக மேலிடத்தைக் கடும் கோபமடையச் செய்திருந்தது. இந்தச் சூழலில், முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்துப் பேசி நிலைமையைச் சீர்செய்ய வேணுகோபால் முடிவு செய்தார். இதற்காகவே சென்னை விமான நிலையம் அருகிலுள்ள ஓட்டலில் தங்கிய அவர், நேற்று காலை முதல்வரைச் சந்திக்க நேரம் கேட்டார். ஆனால், சட்டப்பேரவைக் கூட்டத் தொடரைக் காரணம் காட்டி திமுக தரப்பில் நேரம் ஒதுக்கப்படவில்லை. இதனால் மதியமே அவர் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்" என்றனர்.

தொடர்ந்து பேசிய அறிவாலயப் புள்ளிகள், "மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி ஆகியோர் கூட்டணிக்கு விரோதமாகத் தொடர்ந்து சர்ச்சை கருத்துகளைப் பேசி வந்தனர். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் காங்கிரஸ் தலைமைக்குக் கோரிக்கை விடுத்தோம். ஆனால், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சென்னை வந்த கே.சி. வேணுகோபாலோ, 'ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதெல்லாம் அவரவர் சொந்தக் கருத்து' எனப் பேட்டியளித்துவிட்டுச் செல்கிறார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இதன் மூலம் சர்ச்சைக்குரிய அந்தப் பேச்சுகளுக்குப் பின்னால் ராகுல் காந்தி, கார்கே அல்லது வேணுகோபால் ஆகியோரின் தொடர்பு இருக்குமோ என்கிற சந்தேகம் எங்களுக்கு எழுந்துள்ளது. எனவே, எங்கள் தலைவர் ஸ்டாலின் நேரடியாக சோனியா காந்தியிடமே இது குறித்துப் பேசிக்கொள்ளலாம் என முடிவு செய்துவிட்டார். அதன்படியே பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால்தான் வேணுகோபாலைச் சந்திக்க முதல்வர் விரும்பவில்லை" என்றனர்.



எதிர் வரும் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு, நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்ட வாக்கு சாவடி மையங்களை

# மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, பிப்.20-

எதிர்வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, நீலகிரி மாவட்டம் 109 கூடலூர் சட்ட மன்ற தொகுதி, பந்தலூர் வட்டம் சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் மற்றும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் த என்.எஸ். நிஷா முன்னிலையில், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எதிர்வரும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, பந்தலூர் வட்டம் சேரங்கோடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சேரங்கோடு பஜார், கன்னம்வயல் வாக்குச் சாவடி மையம், மன்னாத்தி வயல் வாக்குச்சாவடி மையம், மரடி வாக்குச்சாவடி மையம், கொன்னச்சல் வாக்குச்சாவடி மையம், கழிச்சல் வாக்குச்சாவடி மையம், அய்யன்கொல்லி வாக்குச்சாவடி மையம், காவயல் வாக்குச்சாவடி மையம், மழவன் சேரம்பாடி வாக்குச்சாவடி மையம், கொளப்பள்ளி வாக்குச்சாவடி மையம் உள்ளிட்ட வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை, மின்சாரம், சாய்வுதளம் ஆகியவை குறித்தும், பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கக்குண்டி கிராமத்தில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்குமாறு சம்மந்த துறை அலுவலரிடம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன், காவல் துணை கண்காணிப்பாளர் (தேவாலா) கல்யாணகுமார், பந்தலூர் வட்டாட்சியர் சிராஜூதீன் நிஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்

# பாஜக எல்லாபுரம் கிழக்கு ஒன்றியம் சார்பில் நெய்வேலியில் சக்தி கேந்திரா தெருமுனைக்கூட்டம்





திருவள்ளூர், பிப்.20-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் கிழக்கு மண்டல் நெய்வேலி கிராமத்தில் சக்தி கேந்திரம் நாளைநமதே தமிழ்நாடும் நமதே தலைப்பில் 18.02.2026 அன்று மாலை 6 மணி அளவில் தெருமுனை பிரச்சார கூட்டம் கிழக்கு மாவட்ட தலைவர் S.சுந்தரம் அவர்கள் முன்னிலையில் மாவட்டத்தின் பொதுச் செயலாளர் கே.ஜி.எம் சுப்பிரமணி அவர்களின் தலைமையில் மாவட்ட சக்தி கேந்திர பொறுப்பாளர் சந்துரு அவர்களின் வழிகாட்டுதலோடு ஐவர் குழுவின் பொறுப்பாளர் ஜெய் பிரகாஷ் அவர்களின் ஆலோசனை பேரில் மண்டல் பொறுப்பாளர் எம்.கே. சீனிவாசன் அவர்கள் வழிகாட்டுதலோடு மாநில பொதுக்குழு உறுப்பினர் சிதம்பர லிங்கம் அவர்களின் மேற்பார் வையில் மண்டல் பொதுச்செயலாளர்கள் மண்டல் துணை தலைவர் மண்டல் செயலா ளர்கள் சக்தி கேந்திர பொறுப் பாளர்கள் அணி பிரிவு தலைவர்கள் இவர்களின் ஒருங்கி ணைப்பில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு திருமுனை பிரச்சாரக் கூட்டத்தை சிறப்புத்தனர்இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மண்டல தலைவர் நாகராஜ் சக்தி கேந்திர பொறுப்பாளர் பிரேம்குமார் எல்லாபுரம் கிழக்கு மண்டலம் நன்றி தெரிவித்தனர்

# கிருஷ்ணகிரி மாவட்டம் மேட்டுநிலங்களில் கேழ்வரகு சாகுபடி தீவிரம்

நியாய விலை கடைகளில் விற்பனை செய்தால் உற்பத்தி அதிகரிக்கும் - விவசாயிகள் கோரிக்கை



கிருஷ்ணகிரி, பிப்.20-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாணவாரி பயிரான கேழ்வரகு சாகுபடி அதிகரித்து வருகிறது. குறிப்பாக தளி, தேன்கனிக் கோட்டை, அஞ்செட்டி, கெலமங்கலம், ராயக்கோட்டை, வேப்பனப் பள்ளி, பேரிகை, காவேரிப் பட்டினம், போச்ச ம்பள்ளி, ஊத்தங்கரை உள்ளிட்ட மேட்டு நிலப்பகுதிகளில் குறைந்த அளவு நீரை பயன்படுத்தி விவசாயிகள் கேழ்வரகு பயிரிடுகின்றனர். நீர்வளக் குறைபாடு நிலவும் சூழலில், குறைந்த மழைப் பொழிவிலும் வளரும் பயிராக இருப்பதால் இது விவசாயிகளுக்கு நம்பிக்கையை அளித்து வருகிறது. கேழ்வரகு குறைந்த நாட்களில் அறுவடைக்கு வரும் பயிராகும். செலவுகள் குறைவாக இருப்பதுடன், சந்தையில் நிலையான விலை கிடைப்பதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. குறிப்பாக கோடை காலங்களில் கேழ்வரகு கூழ், கேழ்வரகு களி, கேழ்வரகு சாதம் உள்ளிட்ட உணவுப் பொருட்களை பொதுமக்கள் அதிக அளவில் விரும்பி வாங்கி வருகின்றனர். அதிகளவு கால்சியம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த இயற்கை உணவ ாக கேழ்வரகு கருதப்படுவதால், உடல்நலத்தை பாதுகாக்கும் உணவுப் பொருளாக மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. சக்கரை நோய் மற்றும் எலும்பு பலவீனம் போன்ற பிரச்சினைகளுக்கு ஏற்ற உணவாக மருத்துவர்களும் பரிந்துரைக்கின்றனர்.

இதனையடுத்து, தமிழக முழுவதும் அனைத்து நியாய விலை கடைகளிலும் கேழ்வரகை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுத்தால், மக்களுக்கு சத்தான உணவு எளிதில் கிடைக்கும். அதேசமயம் உற்பத்தி அதிகரித்து, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் வாய்ப்பு உருவாகும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடைக்கானல் 63 வது மலர் கண்காட்சியை முன்னிட்டு பிரையண்ட் பூங்காவில்

# இரண்டாம் கட்டமாக 2.5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு பணியும், ரோஜா தோட்டத்தில் கவாத்து பணியும் தொடங்கியது



திண்டுக்கல், பிப்.20-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் மே மாதத்தில் மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா நடைபெறுவது வழக்கம்.

இந்த நிலையில் 63 வது மலர் கண்காட்சி கண்டு ரசிப்பதற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவது வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது..

மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு முதற்கட்ட நடவு பணியானது நடைபெற்று முடிந்து பராமரிப்பு பணி தற்போது நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இன்று இரண்டாம் கட்ட நடவு பணியானது இன்று தொடங்கிய நிலையில் இந்த நடவு பணியை கொடை க்கானல் தோட்டக்கலைத்துறை துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தொடங்கி வைத்தனர். இதில் மொத்தம் 2.5 லட்சம் மலர் நாற்றுக்கள் நடவு செய்ய பட்டு வருகிறது.

இதில் குறிப்பாக இன்கா மேரி கோல்டு , பிரன்ச் மேரி கோல்டு, பிளாக்ஸ், கேலன்டுலா, பேன்ஷி, பெட்டூனியா, ஜினியா போன்ற மலர் மலர் நாற்றுகள் நடவு பணி இன்று தொடங்கியது.

மேலும் இந்த ஆண்டு சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக டேலியா , ஜெரேனியம், சைக்லமன் , லில்லி, போன்ற 85 வகையான விதைகளும், ஜப்பான்,அமெரிக்கா , ஜெர்மனி மற்றும் நெதர் லாந்து நாடுகளில் இருந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் இருந்து உற்பத்தி செய்யபட்டு கொண்டுவரப்பட்ட சுமார் 6 லட்சம் மலர் நாற்றுகள் பராமரிப்பு பணியும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அதை போல் வருகின்ற மலர் கண்காட்சிக்கு கண்ணாடி மளிகை மற்றும் பூங்காவில் 10000 வண்ண மலர் தொட்டிகள் பராமரித்து வருவதாகவும் தெரிவித்தனர்

மேலும் அப்சர்வெட்டரி பகுதியில் அமைந்துள்ள ரோஜா தோட்டத்தில் 3000 மேற்பட்ட ரோஜா செடிகளுக்கு கவாத்து எடுத்து ரோஜா செடிகளை பராமரிக்கும் பணியும் இன்று தொடங்கப்பட்டு வருகின்றனர்.

# கிருஷ்ணகிரியில் இன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்



கிருஷ்ணகிரி, பிப்.20-

கிருஷ்ணகிரியில் இன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இன்று(20ம் தேதி) சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது. காலை 10 மணி முதல் 1 மணி வரை நடைபெறும் முகாமில் கிருஷ்ணகிரி, ஓசூரைச் சேர்ந்த முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் கலந்துகொண்டு ஆட்களைத் தேர்வு செய்யவுள்ளனர்.

10ம் வகுப்பு தேர்ச்சி முதல், பிளஸ் 2 தேர்ச்சி, பட்டதாரிகள், பட்டயப்படிப்பு படித்தவர்கள், ஐடிஐ, டிப்ளமோ உள்ளிட்ட அனைத்து வித கல்வித் தகுதியினரும் கலந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு, கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை 04343 -291983 என்கிற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



# 12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வெளியே எடுக்கப்படும் அத்திவரதர் சிலை

கும்பகோணம், பிப்.20-

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வரதராஜப் பெருமாள் கோயிலில் பாதாள அறையில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதரை 12 ஆண்டுகளுக்கு பிறகு மார்ச் 1ம் தேதி முதல் 10 நாட்களுக்கு பக்தர்கள் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கும்பகோணம் பிரம்மன் கோயில் தெருவில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயிலில் மூலவர் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பாதாள அறையில் அத்தி மரத்தாலான, சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிலை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டு, மீண்டும் பாதாள அறைக்கு கொண்டு செல்லப்படும்.

1915ம் ஆண்டுக்குப் பின் பல்வேறு காரணங்களால் இந்த சிலை வெளியே எடுத்து வைக்கப்படவில்லை. 98 ஆண்டுகளுக்கு பிறகு 2013ம் ஆண்டு இந்த சிலை வெளியே எடுக்கப்பட்டு, பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. பின்னர் அந்த சிலை மீண்டும் பாதாள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

இந்தநிலையில், 12 ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை மார்ச் 1ம் தேதி வெளியில் எடுக்கப்பட்டு, சிறப்பு பூஜைகளுக்குப் பின்னர் பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட உள்ளது. தொடர்ந்து, மார்ச் 10ம் தேதி வரை இந்த சிலையை பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

அப்போது ஆகம விதிகளின்படி காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரை தைலக்காப்பு, புஷ்ப சேவை, ஊஞ்சல் சேவைகளை பக்தர்களே செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்





# கிருஷ்ணகிரி பழையபேட்டை அங்காளபரமேஸ்வரி அம்மன் கோயிலில் மயான கொள்ளை விழா: தீமிதி, திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது

கிருஷ்ணகிரி, பிப்.20-

கிருஷ்ணகிரி பழைய பேட்டை அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில், நேற்று முன்தினம் அம்மன் மயான கொள்ளைக்கு புறப்படும் நிகழ்ச்சி நடந்தது. இதையடுத்து நேற்று மாலை, 7:30 மணிக்கு அம்மனுக்கு விடாய் உற்சவமும், ஊஞ்சலில் அம்மனை வைத்து தாலாட்டும் நிகழ்ச்சியும் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் வீட்டில் இருந்து கூழைக் கொண்டு வந்து அம்மனுக்கு படைத்தனர். தொடர்ந்து அம்மனை ஊஞ்சலில் வைத்து தாலாட்டுப் பாடல் பாடினர். பின்னர் பக்தர்கள் தேங்காயில் கற்பூரம் ஏற்றி அம்மனை வழிபட்டனர்.

பக்தர்கள் அனைவருக்கும் கூழ் பிரசாதமாக வழங்கப்ப ட்டன. இன்று (பிப். 19) மாலை, 6:30 மணிக்கு அக்னி குண்ட தீமிதி விழாவும், நாளை பகல், 11:00 மணிக்கு அம்மன் திருக்கல்யாணமும், மாலை 3 மணிக்கு அம்மையப்பன் திருவீதி உலா மற்றும் மஞ்சள் நீராட்டு விழாவும், 21ல் கும்ப பூஜையும் நடைபெற உள்ளன.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி மணி மஹாலில், வேளாண்மைத்துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிழா மற்றும் வேளாண் கண்காட்சியில் அமைக்கப்பட்ட சிறுதானிய விதைகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் கருவிகள், பாரம்பரிய சிறுதானிய உணவு கண்காட்சி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் பார்வையிட்டார். உடன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் காளிமுத்து, வேளாண்மை துணை இயக்குநர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஏஞ்சலின் பொன்ராணி, உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# அதிரடியாக கைது செய்த வனச்சரகர் குமரேசன்

திண்டுக்கல், பிப்.20-

திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி வனச்சரகத்திற்கு உட்பட்ட அரசமரத் துபட்டி பீட் அருகில் உள்ள பண்ணைப்பட்டி கோம்பையில் குணசீலன் என்பவரின் பட்டா நிலத்தில் தோதகத்தி மரங்களை அறுத்துக் கொண்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் படி மாவட்ட வன அலுவலர் நாக சதீஷ் கிடி ஜாலா, உத்தரவின்படி வனச்சரகர் குமரேசன் தலைமையிலான வனபணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் அங்கு மரங்களை அறுத்துக் கொண்டிருந்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளான ராஜீவ் காந்தி,அன்வர்,ராமர் ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதில் தலை மறைவு குற்றவாளிகளான குணசீலன்,ரமேஷ் ஆகிய 2 பேரை தேடி வருகின்றனர்




## கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மாணவிகளுக்கு சுயதொழில் பயிற்சி

கிருஷ்ணகிரி, பிப்.20-

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு தொழில் முனைதிறனை வளர்க்கும் வகையில் சுயதொழில் பயிற்சி வழங்கப்பட்டது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் நுகர்வோர் உரிமை, குழந்தைகள் உரிமை மற்றும் பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை இணைந்து ஆர்வமுள்ள 60 மாணவிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி நடத்தியது.

இந்த பயிற்சியில் சோப்பு தயாரித்தல் மற்றும் காளான் வளர்ப்பு குறித்த பயிற்சியை நாமக்கல்லைச் சேர்ந்த பிரபாகரன் வழங்கினார். பயிற்சி நிறைவில் மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கல்லூரி முதல்வர் கீதா தலைமை வகித்து பேசுகையில், பெண்கள் சுயதொழில் கற்றுக்கொள்வது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு முக்கியம் எனவும், வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலை வழங்குபவர்களாக உயர வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து அறக்கட்டளையைச் சேர்ந்த செந்தில் ராஜா, மாவட்ட திட்ட மேலாளர் சிவபாரத், பேராசிரியர் பரமகுரு ஆகியோர் பயிற்சி முடித்த 60 மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினர்.

## ஊத்தங்கரையில் மேம்பால பணிகள் ஆய்வு - மாணவர்களுக்கு பரிசு வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர்

கிருஷ்ணகிரி, பிப்.20-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்று வரும் 3 மேம்பால கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகள் திட்டமிட்ட காலக்கெடுவுக்குள், தரமான முறையில் நிறைவு செய்யப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். மேலும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பணிகளை முன்னெடுக்கவும் உத்தரவிட்டார்.



இதனைத் தொடர்ந்து, மூங்கில் உற்பத்தி மையத்தையும் பார்வையிட்டு, மூங்கிலால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்கள் குறித்து அதிகாரிகள் மற்றும் கைவினைஞர்களிடம் கேட்டறிந்தார். உள்ளூர் கைவினைஞர்களுக்கு அரசு திட்டங்கள் மூலம் கூடுதல் ஆதரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பின்னர், மாவட்ட தொழில் மையம் மூலம் கடன் உதவி பெற்று செயல்பட்டு வரும் தனியார் நிறுவனத்தில் பிஸ்கட் மற்றும் தின்பண்டங்கள் தயாரிக்கும் பணிகளை ஆய்வு செய்தார். உற்பத்தி தரம், வேலைவாய்ப்பு நிலை மற்றும் சந்தைப்படுத்தல் குறித்து விவரங்களை கேட்டறிந்தார். இத்தகைய சிறு, குறு தொழில்கள் ஊரக பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து, ஊத்தங்கரை விளையாட்டு மைதானத்தில் போச்சம்பள்ளி செய்யாறு காலனி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இறுதியாக, SEZ நிறுவனம் மூலம் கட்டப்பட்டுள்ள புதிய விளையாட்டு அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்வரங்குகள் இளைஞர்களின் திறமைகளை மேம்படுத்த உதவும் என்றும், மாவட்டத்தில் விளையாட்டு வளர்ச்சிக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் கூறினார்.



■ புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், வி.லெட்சுமிபுரம் கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



## உத்தமபாளையம் காளாத்தீஸ்வரர் ஞானாம்பிகை கோயில் மாசி மக தேரோட்டம் மார்ச்சில் நடைபெறுவதையொட்டி கொடியேற்றம்

உத்தமபாளையம், பிப்.20-

உத்தமபாளையம் காளாத்தீஸ்வரர் உடனுறை ஞானாம்பிகை கோயில் வரலாற்று சிறப்பு பெற்றது. இது ராகு கேது கால சர்ப்ப தோஷ நிவர்த்தி ஸ்தலமாகும். ராகுவும், கேதுவும் தனித் தனி சன்னதிகளில் தம்பதி சகிதமாக எழுந்தருளியுள்ளனர். ஞாயிறு தோறும் ராகு காலத்தில் நடைபெறும் சிறப்பு பூஜைகளில் பங்கேற்க பல்வேறு மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் வருகின்றனர். இக்கோயிலின் தேரோட்டம், ஆண்டுதோறும் மாசி மாதம், மாசி மக தேரோட்டமாக நடைபெறும்.முன்னதாக வாஸ்து சாந்தி, யாகசாலை பூஜை நடைபெற்றது. இவ்விழாவானது இந்து சமய அறநிலையத்துறை சார்பில் முன்னெடுக்கப்படுகிறது கோயில் செயல் அலுவலர் மற்றும் அறங்காவல் துறை நிர்வாகிகள் பக்தர்கள் கலந்து கொண்டனர் .....

## ஊத்துக்கோட்டையில் தினந்தோறும் போக்குவரத்து வாகன நெரிசல் பொதுமக்கள் பாதிப்பு போக்குவரத்து காவல்துறை கண்டு கொள்ளுமா சமூக ஆர்வலர்கள் கேள்வி?

திருவள்ளூர், பிப்.20-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி 15வார்டுக்குட்பட்ட சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் இப்பகுதியில் அரசு அலுவலகங்கள் வட்டாட்சியர் அலுவலகம் சப்ரிஜிஸ்டர் அலுவலகம் மற்றும் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி தாலுக்கா மருத்துவமனை வங்கி பரிவர்த்தனைகள் சம்பந்தமாக ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் நேருபஜார் வீதி சாலையை பயன்படுத்துகின்றனர்.




இந்நிலையில் விழா காலங்கள், திருமண நாட்களின் நேரங்கள், பண்டிகை நேரங்கள் மட்டும் போக்குவரத்துநெரிசல் காணப்பட்டு வந்த ஊத்துக் கோட்டை நேருபஜார் நான்கு வழி சாலைகள் தற்போது தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்படுகிறது அவல நிலை உருவாகி வருகிறது இதனால் வேலைக்கு செல்பவர்கள் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகள் மருத்துவமனைக்கு செல்கிறவர்கள் மிகவும் அதிக சிரமத்திற்கு ஆளாகி வருவதாக குற்றம் சாற்றப்படுகிறது மாவட்ட காவல் போக்குவரத்து துறை நிர்வாகம் மற்றும் ஊத்துக்கோட்டை காவல் நிலைய அதிகாரிகள் இதனைக் கண்டு கொள்வார்களா என அப்பகுதி சமூக ஆர்வலர்களின் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்து வருகிறது



## 188 வது வட்டம் மடிப்பாக்கத்தில் கிராம சபை கூட்டம்

மடிப்பாக்கம். பி.20-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 14 வது மண்டலத்திற்கு உட்பட்ட 188 வது வட்டத்தில் கிராம சபை கூட்டம் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்., தமிழச்சி தங்கபாண்டியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர்,. எம்.எல்.ஏ., எஸ். அரவிந்த் ரமேஷ், மண்டல குழு தலைவர்., எஸ். வி. ரவிச்சந்திரன் முன்னிலையில் மாமன்ற உறுப்பினர், எஸ். சமீனா செல்வம் தலைமையில் ( பிப் : 16) அன்று மடிப்பாக்கம் பஸ் நிலையம் மாநகராட்சி அலுவலகம் முன்பு சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து எம்.எல்.ஏ., மக்களின் குறைகளை கேட்டு அறிந்து உடனடி தீர்வு காணும் படி அரசு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் வட்டக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் கீரப்பாக்கம் கிளையில் சார்பாக மாற்றுத்திறனாளிக்கான சமத்துவ பொங்கல்

செங்கல்பட்டு, பிப்.20-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றித்து உட்பட்ட கீழ்ப்பாக்கம் ஊராட்சியில் 18/01/2026 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணி அளவில் தமிழ்நாடு அரசு அடுக்கு மாடி குடியிருப்பு இடத்தில் பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் கீரப்பாக்கம் கிளையில் சார்பாக மாற்றுத்திறனாளிக்கான சமத்துவ பொங்கல் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இனிப்பு பொங்கல் வைத்து, நல திட்ட உதவி உபகரணங்கள் வழங்குதல், நடனம், விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர்கள் செங்கல்பட்டு மாவட்டம் கீரப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தலைவர் செல்வ சுந்தரி ராஜேந்திரன். கீரப்பாக்கம் தலைவர் ராஜேந்திரன், செல்வ சேகர் லயன்ஸ் கிளப் தலைவர், அன்னை லதா ரூட் லேம்ப் டிரஸ்ட், பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் செல்வி பி.கவிதா, தலைவர் கலா, கௌரவத் தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் தேவி, கீரப்பாக்கம் கிளைச் செயலாளர் தனசேகர் துணை செயலாளர் சதீஷ் பாபு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## “அதிமுக சாதனை திட்டங்கள் மீது சவாரி செய்யும் திமுக தோல்வி அடைய வாழ்த்துகள்” - இபிஎஸ்

**சென்னை, பிப்.20–**

முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆட்சியில் சாதனைகள் என்று எதுவும் இல்லை என குற்றம் சாட்டியுள்ள எடப்பாடி பழனிசாமி, தோல்வி அடைய வாழ்த்துகள் என்று கிண்டலித்துள்ளார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ‘‘என்ன தான் ஆச்சு இந்த பொம்மை முதல்வருக்கு? ஆட்சிக்கு வந்து எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் நிறைவேற்றவில்லை, திறந்ததெல்லாம் அதிமுக திட்டங்கள் மீதான ஸ்டிக்கர்கள் மட்டுமே!



இது போதாது என்று, தேர்தல் நெருங்குவதும் ஸ்டிக்கர் பித்து அதிகரித்ததோ என்னவோ, அஇஅதிமுகவின் வரலாற்றுச் சாதனைகள் மீது ஏறி சவாரி செய்ய ஆசைப்படுகிறார் மு.க. ஸ்டாலின்.

ஏற்கனவே 7.5% திட்டம் குறித்து ஒரு வரலாற்றுப் பொய்யை நாக் கூசாமல் மருத்துவத்துறை அமைச்சர் வாயிலாக பேசியதை, நேற்று சட்டமன்றத்திலேயே தோலுரித்தேன்.

நேற்று மாலை, தனது தொடர், “ஆடியோ லாஞ்ச் மேடை அரசியலின்” அங்கமாக விளையாட்டு துறை சார்ந்த விழா ஒன்றில் மேடையேறிய பொம்மை முதல்வர், “விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீடு” திட்டத்தின் பலன்கள் மீது தனது பெயரை எழுதிக் கொள்ள முனைந்தது வேடிக்கையாக இருந்தது.

விளையாட்டு வீரர்களுக்கான அரசுப்பணிகளில் இட ஒதுக்கீடு என்பது, 2018 ல் எனது தலைமையிலான அதிமுக அரசு 2%ஆக அறிவித்தது. இதற்கு நன்றி தெரிவித்து விளையாட்டு வீரர்கள் அளித்த விழாவில், இந்த இட ஒதுக்கீட்டை 3% ஆக உயர்த்தி நான் அறிவித்தேன்.

அதன் பிறகு, 2020 ல் கொரோனா பெருந் தொற்றுக் காலம், 2021ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது.

இதில் ஸ்டாலின் செய்தது என என்ன இருக்கிறது? பணி ஆணைகள் கொடுப்பது போல் போட்டோ எடுத்துக் கொண்டது மட்டுமே இந்த பொம்மை முதல்வரின் ஒரே பங்களிப்பு.

7.5% மருத்துவ உள் இடஒதுக்கீடு ஆகட்டும், 3% விளையாட்டு வீரர்களுக்கான ஆகட்டும் நான் அரசுப்பள்ளியில் படித்தவன், விளையாட்டு வீரர்களின் உணர்வுகளைப் புரிந்தவன் என்ற முறையில், அவர்களுக்காக பார்த்துப் பார்த்துச் செய்த சாதனைத் திட்டங்கள். இதெல்லாம் ஸ்டாலின் போன்றோருக்கு எப்படி புரியும்? இப்படி ஏதாவது ஒரு புதிய சாதனைத் திட்டத்தை ஸ்டாலின் கொடுத்தாரா? இல்லை!

அதனால், இப்படி வெட்கமின்றி எங்கள் திட்டத்தின் மீது சவாரி செய்யும் எண்ணத்தை எல்லாம் கைவிட்டு, உங்கள் ஆட்சியின் சாதனைகளைக் கூறிப் பிரச்சாரம் செய்யப் பாருங்கள் மு.க.ஸ்டாலின். (ஓஹ்ஹ்.. அப்படி எதுவுமே இல்லையோ..??!! சரி, தோல்வி அடைய வாழ்த்துகள்!)’’ என தெரிவித்துள்ளார்.

## பெரம்பலூரில் தாட்கோ மூலம் இளைஞர்களுக்கு விமான முன்பதிவு கேபின் குழு பணியாளர் பயிற்சி கலெக்டர் மிருணாளினி தகவல்

பெரம்பலூர், பிப்.20-

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு விமான முன்பதிவு ஆளுமை (Airline Reservation Executive) கேபின் குழு பணியாளர் (Airline Cabin Crew Course) பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். 18 முதல் 35 வயது வரை உள்ளவர்களாகவும், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.



மேலும், இப்பயிற்சிக்கான கால அளவு 3 மாதங்கள் ஆகும்.

இப்பயிற்சியில் விமான டிக்கெட் முன் பதிவு முறை, வாடிக்கையாளர் சேவை, தொடர்புத்திறன், ஆளுமை மேம்பாடு, விமான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் கேபின் குழு பணிகள் குறித்து தொழில் முறை பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி திருப்பூர் மாவட்டத்தில் அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியினை முழுமையாக முடித்த இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு வழிவகை செய்யப்படும்.

இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையதளமான www.tahdco.com முகவரியில் விண்ணப்பிக்கலாம். மேலும், திருப்பூரில் உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி மற்றும் உணவுக்கான செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும், எனவே, இந்த வாய்ப்பினை ஆர்வமுடையோர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கலெக்டர் மிருணாளினி தெரிவித்துள்ளார்.

# சிவகங்கையில் இலவச கண் விழித்திரை பரிசோதனை முகாம்: டாக்டர் கார்த்திக் ராஜனுக்கு பிறந்தநாள் வாழ்த்து

சிவகங்கை, பிப்.20-

உலக நீரிழிவு நோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, சிவகங்கை கார்த்திக் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் மதுரை ஸ்ரீ ராமச்சந்திரா கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் பிரம்மாண்ட இலவச கண் விழித்திரை பரிசோதனை முகாம் நடைபெற உள்ளது.

முகாம் விவரம்:

சர்க்கரை நோயி னால் கண்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், உரிய சிகிச்சை அளிக்கவும் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




* நாள்: 20.02.2026 (வெள்ளிக்கிழமை)

* நேரம்: காலை 9.30 மணி முதல்

* இடம்: கார்த்திக் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, 28, மதுரை ரோடு, சிவகங்கை.

சிறப்பு அம்சங்கள்:

இந்த முகாமில் டாக்டர் மணிவண்ணன் மற்றும் டாக்டர் கார்த்திக் ராஜன் ஆகியோர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பங்கேற்கின்றனர். மேலும், மதுரை ஸ்ரீ ராமச்சந்திரா கண் மருத்துவமனையின் கண் சிறப்பு மருத்துவர் டாக்டர் S. சீனிவாசன் கலந்து கொண்டு, முழுமையான கண் பரிசோதனை மற்றும் விழித்திரை தொடர்பான ஆலோசனைகளை வழங்க உள்ளார். கண் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இந்த முகாமில் இலவச ஆலோசனைகள் வழங்கப்படும். பொதுமக்கள் இந்த அறிய வாய்ப்பினை தவறவிடாமல் பயன்ப டுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பிறந்தநாள் வாழ்த்து:

இந்த முகாம் நடைபெறும் வேளையில், நாளை தனது பிறந்த நாளைக் கொண்டாடும் டாக்டர் கார்த்திக் ராஜன் அவர்களுக்கு மாலைதந்தி நாளிதழ் வாயிலாக எங்களது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் மேன்மேலும் மக்கள் சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துகிறோம்.

தொடர்புக்கு: 98949 52181

மின்னஞ்சல்: srinivasasrceh@gmail.com

# 23 ஆண்டுகால கோரிக்கை: போராட்டக் களத்தில் 25,000 டாஸ்மாக் பணியாளர்கள்

சென்னை, பிப்.20-

தமிழக அரசின் முதன்மை வருவாய் ஆதாரமாக விளங்கும் டாஸ்மாக் நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் 25,000 பணியாளர்கள், தங்களது வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் மற்றும் ஓய்வூதியம் ஆகிய அடிப்படை உரிமை களுக்காக 20க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.




முக்கியக் கோரிக்கைகள் மற்றும் போராட்ட வடிவங்கள்

கடந்த 23 ஆண்டுகளாகத் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றி வரும் ஊழியர்கள், தற்போது தங்களின் நிலையை அரசிடம் கொண்டு செல்லப் பல்வேறு கட்டப் போராட்டங்களை அறிவித்துள்ளனர்:

தொடர் கடையடைப்பு: கோரிக்கைகள் நிறைவேறும் வரை பணிப் புறக்கணிப்பு மற்றும் கடையடைப்பு போராட்டம்.

காலி பாட்டில் ஸ்டிக்கர் ஒப்படைப்பு: அனைத்து மாவட்டங்களிலும் அடையாளப் போராட்டமாகக் காலி பாட்டில்களில் உள்ள ஸ்டிக்கர்களை அரசிடம் ஒப்படைக்கும் போராட்டம்.

முறையான அறிவிப்பு: கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை (Notice) அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகத்திடம் சமர்ப்பித்தல்.

பணியாளர்களின் குமுறல்: "அட்சய பாத்திரம்.. ஆனால் வாழ்வாதாரம் கேள்விக்குறி"

தமிழக அரசின் நிதி ஆதாரத்திற்கு 'அட்சைய பாத்திரமாக'த் திகழும் தங்களுக்கு, அடிப்படைப் பணி விதிகள் கூட இல்லை எனப் பணியாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். "குறைந்த ஊதியத்தில் சமூக இன்னல்களைத் தினந்தோறும் சந்தித்து வருகிறோம். பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை," எனப் போராட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

"அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்துவது எங்கள் நோக்கமல்ல. ஆனால், ஓய்வு பெறும் வயதை நெருங்கியும் சமூகத்தில் கீழ்த்தரமாகச் சித்தரிக்கப்படும் அவலநிலை மாற வேண்டும். தொழிற்சங்கச் சட்டங்களின்படி எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் ஒரே கோரிக்கை."

எதிர்பார்ப்பு

தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, சுமூகமான பேச்சுவார்த்தை மூலம் 25,000 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தாகவும் உள்ளது.

# டாஸ்மார்க் ஊழியர்களின் மனக்குமுறல்

டாஸ்மாக் பணியாளர்களின் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் மற்றும் ஓய்வூதியம் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் கடையடைப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் காலிபாட்டில் ஸ்டிக்கர் ஒப்படைப்பு போராட்டம், மேலும் நோட்டிஸ் அளிப்பது கோரிக்கைகளை முன் வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில வாணிப கழகம் என்னும் டாஸ்மாக் நிறுவனத்தில் கடந்த 23 ஆண்டுகளாக 25, 000 பணியாளர்கள் குறைந்த தொகுப்பு ஊதியத்திலும் மேலும் வாழ்வாதாரம் பாதிக்கும் நிலையில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு அடிப்படைப் பணி விதிகள் ஏதுமின்றியும் பல்வேறு சமூக இன்னல்களை தினந்தோறும் அனுபவித்து வருகின்றனர். தமிழக அரசின் நிதி ஆதாரத்திற்கு அட்சய பாத்திரமாக உள்ள டாஸ்மாக் பணியாளர்களுக்கு பல சங்கங்களில் சார்பிலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பலவிதமான அறப்போராட்டங்களை நடத்தியும் தமிழக அரசின் சார்பிலும் டாஸ்மாக் தலைமை அலுவலகத்திலும் பல கட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்ட பிறகும் கூட இவர்களுக்கு அடிப்படை கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை ஆகையால் டாஸ்மாக்கில் உள்ள 20க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பணிநிறுத்தம், காலமுறை ஊதியம், ஓய்வு ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக தொடர் கடை அடைப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது. போராட்டம் செய்வதோ அரசிற்கு அவப்பெயர் ஏற்படுவதோ எங்களது நோக்கம் அல்ல என்பதை தெரிவிப்பதுடன் தமிழக அரசின் பேச்சு வார்த்தையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஓய்வு பெறும் வயதில் உள்ள டாஸ்மாக் பணியாளர்கள் சமூகத்தில் மிகவும் கீழ்த்தரமாக சித்தரிக்கப்படுகிறார்கள் இவைகள் களையப்படவும் தொழிற்சங்க சட்டங்களில் நீதி நிலை நிறுத்தப்படவும் வேண்டும் என்று தமிழக அரசை மிகவும் வேண்டி கேட்டுக் கொண்டனர்.




## பாஜக கட்சி கும்முடிப்பூண்டிவடக்கு ஒன்றியம் சார்பில் நாளைநமதே தமிழ்நாடும் நமதே என்ற முழக்க தெருமுனைக் கூட்டம்

திருவள்ளூர், பிப்.20-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி வடக்கு ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் திரு. ஷி.சண்முகநாதன்அவர்களுடைய ஏற்பாட்டில் கும்மிடிப்பூண்டி வடக்கு ஒன்றிய தலைவர் திரு. சந்திரசேகர்* அவர்களின் தலைமையில் கும்மிடிப்பூண்டி தொகுதிக்குட்பட்ட விவேகானந்த நகர் 4 வது தெருவில் "நாளை நமதே.. தமிழ்நாடும் நமதே..என்ற தலைப்பில் தெருமுனை பிரச்சாரகூட்டம் 18.02.2026 மாலை 06:00 மணியளவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி ஜி* அவர்களின் தொலைநோக்கு சிந்தனையால் உருவாகும் வளர்ந்த இந்தியாவுக்கான திட்டங்களைப் பற்றி எடுத்துரைத்து 2021ல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வழங்கிய வாக்குறுதிகளில் 5% கூட நிறைவேற்றாமல் தமிழக மக்களை எப்படி வஞ்சித்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துரைத்தேனர்

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாநில செயலாளர் *டாக்டர் ஆனந்த பிரியா* மற்றும் OBC அணி TNBJP மாநிலசெயலாளர் A.நரேஷ்குமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

மேலும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்துள்ள மாநில மாவட்ட ஒன்றிய மற்றும் அனைத்து நிலை பொறுப்பாளர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர் சிறப்பித்தார்




# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழக அரசை கண்டித்து பிஜேபியின் பட்டியல் அணியின் ஆர்ப்பாட்டம்

தேனி, பிப்.20-

தேனி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பு தேனி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி பிஜேபி சார்பாக தமிழக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ரவிக்குமார் முன்னிலை வகித்தார் .தேனி நகர செயலாளர் வரவேற்புரையாற்றினார். பட்டியலின மாவட்ட தலைவர் ராஜிக் தலைமையில் மாவட்ட செயலாளர் ராஜபாண்டி சிறப்பு அழைப்பாளர் சசி ராமன் மாநில செயற்குழு உறுப்பினர் மதுரை மாவட்ட பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொதுச் செயலாளர்கள் வினோத் குமார் மலைசாமி, மயில் வேல், முத்துமணி முத்துப்பாண்டி தேனிமாவட்ட ஊடகப்பிரிவு மாவட்ட தலைவர் மற்றும் மாவட்ட செயலாளர்கள் பாலமுருகன் கார்த்திக் சசிக்குமார். மாவட்ட மகளிர் அணி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள் பெண்கள் மற்றும் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பொன்னேரியில் பாஜக பட்டியல் அணி மற்றும் ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் திமுகவை கண்டித்து கண்டன ஆர்பாட்டம்

திருவள்ளூர், பிப்.20-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பாரதிய ஜனதா கட்சி பட்டியல் அணி மற்றும் ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் பட்டியல் சமூக மக்களுக்கு தமிழக அரசு ஏற்படுத்திய அநீதியை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 18.02.2025 அன்று காலை 10 மணி அளவில் பொன்னேரி ஆர்.டி.ஓ. அலுவலகம் எதிரில் பட்டியல் அணி மாவட்ட தலைவர் இளங்கோவன் மற்றும் ஒபிசிஅணி மாவட்டதலைர் ஆனந்தன் மற்றும் கிழக்கு மாவட்ட தலைவர் S.சுந்திரம் அதிமுக மாவட்ட செயலாளர் சிறுனீயம் பலராமன் மாநில செயற்குழு உறுப்பினர் V.ராஜேஷ் தலைமையில்



நடைபெற்றது

மேலும் பாஜக மாவட்ட செயலாளர்கள் சந்துரு (ஜே.பி.எ) .M.ஜெயபிரகாஷ் மாறிமுத்து பொதுச்செயவாளர்கள் K.G.M.சுப்பிரமணி அன்பாலயா சிவக்குமார் ஊடகபிரிவு மாவட்ட தலைவர் இளையா சமூக ஊடகபிரிவு தலைவர் நடராஜ் முன்னிலை வகித்தனர் ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டு திமுக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி கண்டன ஆற்பாட்டத்தில் ஈடுபட்டனர்

# திமுக அரசை கண்டித்து பாரதிய ஜனதா கட்சி சார்பில் பட்டியல் அணியினர் குன்னூரில் ஆர்ப்பாட்டம்

குன்னூர், பிப்.20-

பாரதிய ஜனதா கட்சி பட்டியல் சமூக மக்களுக்கு எதிராக செயல்படுவதாக தி.மு.க. அரசை கண்டித்து பாஜக பட்டியல் அணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்




பட்டியல் சமூக மக்களுக்கு எதிரான ஆளும் திமுக அரசால் பட்டியல் சாதியினர் துணைத் திட்டம் (SCSP) நிதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

2020-21: செலவிடப்படாத நிதிகளின் 5.77% ஆகும் என்றும் 2021 -22 ஆம் ஆண்டுடன் முடிவடைந்த ஆறு ஆண்டுகளில், ஒதுக்கப்பட்ட 75,930 கோடியில், 5,318 கோடி பயன்படுத்தப் படவில்லை,என்றும் 2021 22:2,418 கோடியாக (ஒதுக்கப்பட்ட நிதியில் 16.81% பயன்படுத்தவில்லை) (2022) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் பயன்படுத்தப்படாத 927 கோடியை மீட்க சட்ட நடவடிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும் 2022-23: பிப்ரவரியில் மீதமுள்ள சுழற்சியில் டிசம்பர் வரை 10,466 கோடி பயன்படுத்தவில்லை என்றும் 2024-2025: 3015 கோடி) பயன்படுத் தவில்லை, என்றும் 2024 -25 மத்திய அரசு ஒதுக்கிய தாகவும்,15048 20202026 மூன்று மாவட்டங்கள் (தேனி, திருநெல்வேலி மற்றும் தென்காசி) 34.62 கோடி பயன்படுத்தப்படாத நிதியைத் திருப்பி அளித்ததாகவும் பட்டியல் சமூக மக்களுக்கு எதிரான ஆளும் திமுக அரசால் 2022 ல்,வன்கொடு வழக்குகள் 2020இல்,1274 5C குற்ற வழக்குகளை பதிவு செய்துள்ளது.

2021இல் 1377 ஆக உயர்ந்தது.

2022இல், இது 1761 வழக்குகள்

2023 இல்,1684 வன்கொடுமை வழக்குகள் பதியப்பட்டுள்ளது.

நான்கரை ஆண்டுகளில் 3041 வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று ஆர்ப்பாட்டம் செய்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் SC அணி மாவட்ட தலைவர் தங்கம், தலைமையில் மாவட்ட தலைவர் Dr.தர்மன் முன்னிலையில் SC அணி மாவட்ட பொதுச் செயலாளர் R.சக்திவேல், மாநில பொதுக்குழு உறுப்பினர் KPS. சரவணன் மற்றும் M.கனகராஜ் ஆகியோர் வரவேற்புரை அளித்து SC அணி மாவட்ட துணை தலைவர் R.கோபிநாத் நன்றியுரை கூறியும், H.மோகன்ராஜ், K.J.குமார், T.ஈஸ்வரன், போஜராஜ், அன்பரசன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். அம்மா பேரவை மாவட்ட செயலாளர் அஇஅதிமுக சாந்தி ராமு, அஇஅதிமுக சரவணகுமார் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## தேனி மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் காவல்துறையினர் தீவிர வாகனச் சோதனை

தேனி, பிப்.20-

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹா ப்ரியா, உத்தரவின்பேரில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சட்டம் மற்றும் ஒழுங்கை உறுதி செய்யும் வகையில், தேனி மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள அனைத்து சோதனைச் சாவடிகளிலும் காவல்துறையினர் தீவிர வாகனச் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையின் போது சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் கவனமாக ஆய்வு செய்யப்பட்டதுடன், தேவையான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. தேர்தல் விதிமுறைகள் மீறப்படாதவாறு பணம், மதுபானம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்ட சட்டவிரோதப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகிறதா என சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அமைதியான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய காவல்துறையினர் இரவு பகலின்றி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பொதுமக்கள் தேர்தல் விதிமுறைகளை கடைபிடித்து காவல்துறையினருக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# தஞ்சை அருகே வெறி நாய் கடித்து சிறுவன் ஆபத்தான முறையில் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை

திருக்காட்டுப்பள்ளி, பிப்.19-

திருக்காட்டு பள்ளியில் வெறி நாய் கடித்து ஏழு வயது சிறுவன் காயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

திருக்காட்டுப் பள்ளிவளப்பக்குடி மெயின்ரோட்டில் வசித்து வரும் காட்டுராஜா 35 இவரது மனைவி பாப்பாயி 30 இவர்களுக்கு சசிகுமார் என்ற ஏழு வயதுடைய மகன் இருக் கிறார். காட்டுராஜா மனை வியை விட்டு,விட்டு சென்று விட்டார். பாப்பாயி தன் சகோதரன் ராஜா வுடன் வசித்து வருகிறார். ராஜா மற்றும் பாப்பாயி இருவருக்கும் பார்வை குறைபாடு உள்ளது. இவர்கள் இருவரும் திருக்காட்டுப்பள்ளி நீர் வளத்துறை அலுவலகத்தில் தூய்மை பணிசெய்து வருகின்றனர்.



இந்நிலையில் இன்று காலை தூங்கியெழுந்த சசிக்குமார் தாயை பார்ப்பதற்கு காவேரியாற்று படித்துறை நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது அப்பகுதியில் சுற்றிதிரிந்த வெறிநாய் ஒன்று சசிக்குமாரை துரத்தி கொடூரமாக கடித்து குதறியது. சிறுவனின் அலறல் சத்தம் கேட்டு அப்பகுதியில் இருந்த மக்கள் சசிக்குமாரை மீட்டு திருக்காட்டுப்பள்ளி அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தனர். அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் முதல் உதவி அளித்து 108 ஆம்புலன்ஸ் மூலம் தஞ்சை ராஜா மிராசுதாரர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர்.திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி பகுதியில் நூற்றுக்கணக்கான தெருநாய்கள் சுற்றி திரிகின்றன. இதனால் பொதுமக்கள் அன்றாடம் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் சிறுவனை வெறிநாய் கொடுரமாக தாக்கி குதறியது பொதுமக்களை மேலும் பெரும் அச்சத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. நாய்களை கட்டுப்படுத்தி பொதுமக்களை காக்க அரசு, மற்றும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161